நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 19.01.2021

**சாத்தூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

**நிகழும் மங்களகரமான ஆண்டு சார்வரி வருடம் தை மாதம் 6 ஆம் நாள் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்: 1

HUDCO சென்னை அவர்களின் கடிதம் நாள்: 05.01.2021–ல் Housing and Urban Development Corporation Limited (HUDCO) நகர் பகுதியில் அடிப்படை வசதியினை மேற்கொள்ளுவதற்கு Corporate Social Responsibility (CSR) Scheme–ல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவித்து அதற்கான உரிய திட்ட கருத்துருவினை மன்றத்தின் ஒப்புதல் பெற்று சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் நவீன கழிப்பறையினை அமைப்பதற்கு HUDCO நிறுவனத்திற்கு உரிய திட்ட கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகராட்சி பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பறை அமைத்தல் | 20.00 |
| 2 | மதுரை பேருந்து நிறுத்தத்தில் நவீன கழிப்பறை அமைத்தல் | 20.00 |
| 3 | பெரியார் நகர் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நவீன கழிப்பறை அமைத்தல் | 12.00 |
| 4 | நகராட்சி பகுதிக்குட்பட்ட வடக்கு ரதவீதியில் நவீன கழிப்பறை அமைத்தல் | 12.00 |
| 5 | நகராட்சிஅலுவலக கட்டிடத்தில் நவீன கழிப்பறை அமைத்தல் | 12.00 |

**(ந.க.எண். 35/2021/எம்1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண். 716, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 2

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கலர் பிரிண்டரின் மை (Color INK) காலியாகி விட்டதால் திட்டப்பணிகள் குறித்த புகைப்படம் மற்றும் இதர பணிகளுக்கான புகைப்படத்தினை எடுக்க இயலவில்லை. எனவே அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4500/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
**(ந.க.எண். 15/2021/எம்1)**

**நகர்மன்றத் தீர்மானம் எண். 717, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 3

சாத்தூர் நகராட்சியில் திட்டப்பணிகளின் மூன்று ஆண்டு சாதனை மலரில் தினத்தந்தி மற்றும் மக்கள் முகம் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கும், நகராட்சியின் திட்டப்பணியான 2020—2021—ம் ஆண்டிற்கான நகர்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்தவைக்கு கீழ்க்கண்டுள்ளபடி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | தினத்தந்தி | — | ரூ. 12750/— |
| 2. | மக்கள் முகம் | — | ரூ. 6000/— |
| 3. | Eyedea brand Solution | — | ரூ. 40478/— |

(ந.க.எண். 421/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 718, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 4

சாத்துார் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள கலர் பிரிண்டருக்கு 2 செட் கலர் மை சப்ளை செய்ய 08.01.2021—ல் விலைப்புள்ளி கோரப்பட்டு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Star System Services,Sivakasi | - | ரூ. 4365.00/— |
| 2. | Genius Sales & Services,Sivakasi | - | ரூ. 4455.00/— |
| 3. | Rathan computers,Sivakasi | - | ரூ. 4473.00/— |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் Star System Services Sivakasi, நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று அன்றாட பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 15/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 719, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 5

சாத்துார் நகராட்சி இருக்கண்குடி நீர்உந்து நிலையத்தில் உள்ள 12.5 எச்.பி. மோட்டார் பழுது பழுது ஏற்பட்டு இயக்க முடியாமல் உள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச் செலவுத் தொகை ரூ. 30,680 —க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.
(ந.க.எண். 17/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 720, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி நீர்தேக்கத்தில் உள்ள வால்வு பழுது ஏற்பட்டு குடிநீர் பம்பிங் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி 07.12.2020 அன்று கீழ்க்கண்டபடி பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளிக்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவுத் தொகை ரூ.4252/—க்கும் மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மகேஸ்வரி எலக்ட்ரிக்ல்ஸ் | — | ரூ.4374/— |
| 2. | கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் | — | ரூ.4252/— |

(ந.க.எண் 496/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 721, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 7

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19775/ஜே2/2019–3, நாள்:15.12.2020ல் தெரிவித்துள்ளபடி 2018ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அடடவணை V–ல் முடிதிருத்தும் நிலையங்கள், அழகு நிலையம், ஸ்பா மற்றும் மசாஜ் நிலையங்களுக்கு தொழில் உரிமையாணை கட்டணம் நிர்ணயம் செய்து உரிமையாணை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டவாறு மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு (அட்டவணை–V) | ஊரிமையாணை கோரும் தொழில் | அளவு | ஊரிமையாணைக் காலம் | கட்டண விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 249 | முடிதிருத்தம் | 1 இனம் | 1 வருடம் | 300 |
| 2 | 249 | ஸ்பா | 1 இனம் | 1 வருடம் | 1000 |
| 3 | 249 | மசாஜ் பார்லர் | 1 இனம் | 1 வருடம் | 1000 |

மேற்கண்ட தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்த விபரத்தினை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் வெளியிட்டு அதன் விபரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.

எனவே, அவசர அவசியம் கருதி மேற்கண்டவாறு நிறுவனங்களுக்கு தொழில் உரிமம் நிர்ணயம் செய்திடவும், அதன் விபரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.539/2020/எச்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 722, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 8

அரசுக் கடிதம் எண்.15/3/2018-SBM-II-Part-II கடிதத்தில் இந்தியா முழுவதும் தூய்மை நகரம் என பணி நடைபெற்று வருகிறது. அதனை மேம்படுத்தும் விதமாக திறந்தவெளி கழிப்பிடத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், பொதுமக்கள் பயன்படுத்தி வரும் கட்டணக் கழிப்பறையில் வாசகங்கள் அடங்கிய பிளக்ஸ் பேனர்கள், கழிப்பறை வழிகாட்டி ஸ்டிக்கர், பார்கோடுகள் அடங்கிய ஸ்டிக்கர்கள் பொருத்தப்பட்டு பொதுமக்களிடம் நேரடியாக கருத்துக்கணிப்புகள் நடத்தி ODF + சான்று பெறவும் மற்றும் கழிப்பறைகளை பழுது பார்ப்பதற்கும் ஆகும் செலவுத் தொகை ரூ.25,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 723, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 9

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22085/ஜே2/2020, நாள்:14.12.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.ஒ.மு.எண்.3562/2020/அ4, நாள்:05.01.2021 கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ள பாரதாலயா கலைக்குழுவின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மத்திய, மாநில அரசின் பதிவினையும், பொதுமக்கள் அறியும் வண்ணம் சாத்தூர் நகராட்சிக்குட்பட்டுள்ள நகராட்சி பேருந்து நிலையம் மற்றும் முக்குராந்தல் ஆகிய இரு இடங்களில் கொரோனா, டெங்கு, பொது சுகாதாரம் தனிநபர் கழிப்பறை, திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் ஒழிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நடத்திய வகைக்கு செலவுத் தொகை ரூ.10,000/– மேற்படி கலைக்குழுவினருக்கு வழங்கவும், அதற்காகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 724, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 10

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 5 மோட்டார் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது பார்க்கும் பணி செய்ய 18.11.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 14,400/–
2. சிவா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 15,100/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கெங்கா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 337/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 725, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 11

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி நீர்உந்து நிலையத்தில் உள்ள 15 கே.வி.ஏ கெப்பாசிட்டர் பழுது நீக்கம் செய்ய 18.11.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 9,800/–
2. சிவா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் – ரூ. 10,800/–

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கெங்கா எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர், நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 428/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 726, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 12

சாத்தூர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குளோரினேசன் கலப்பதற்கான இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதை பழுது பார்க்கும் பணி செய்ய **18.11.2020–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீசபரி இன்ஜினியரிங் சென்னை | – | ரூ. 27,292/– |
| 2. | ஸ்ரீராஜகணபதி இன்ஜினியரிங் சென்னை | – | ரூ. 30,440/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீசபரி இன்ஜினியரிங் சென்னை, நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 338/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 727, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 13

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் நுண்ணுயிர் உரக்குடிலில் உள்ள அரைவை இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் உரம் தயாரிக்கும் பணி தடைபட்டு வருகிறது. பொது சுகாதாரம் அவசியம் கருதி மேற்கண்ட அரைவை இயந்திரத்தை பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 507/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 728, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 14

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி தலைமை நீரேற்று நிலையத்திற்கு மின்இணைப்பு வழங்கும் டிரான்சபாமரிலிருந்து பெறப்படும் மின்சாரம் பம்ப் அறைக்கு வரும் ஒல்டேஸ் அடிக்கடி குறைவாக வருவதால் சீரான முறையில் மின்சாரம் கிடைப்பதற்கு தேவையான மின்இணைப்பு உபகரணங்களை வாங்கி பயன்படுத்துவதற்கு **18.11.2020–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் | – | ரூ. 10,195/– |
| 2. | சண்முக எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர் | – | ரூ. 9,930/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் சண்முக எல்க்ட்ரிக்ல்ஸ் சாத்தூர், நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 336/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 729, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 15

சாத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்களுக்கு குத்தகைக்காலம் 31.03.2021 உடன் முடிவடைவதால் அதனை அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை அனுபவித்துக் கொள்ளும் பொருட்டு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகை காலம் |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையத்திற்கு வெளியே (பேருந்து நிலைய நுழைவு வாயிலில்) உள்ள சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 31.03.2021 உடன் குத்தகை காலம் முடிவு பெறுகிறது. |
| 2 | நகராட்சி பேருந்து நிலையத்தில் நகராட்சி ஒதுக்கும் இடத்தில் தொலைகாட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமை. | 31.03.2021 உடன் குத்தகை காலம் முடிவு பெறுகிறது. |
| 3 | நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் மற்றும் வெம்பக்கோட்டை ரோட்டில் மதுரை செல்லும் பேருந்துகள் நிறுத்தும் இடத்தில் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | தற்போது துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. |

அ) மேற்கண்ட குத்தகை இனங்களுக்கான குத்தகை காலம் முடிவடைவதால் அரசு விதிகளின்படி 01.04.2021 முதல் 31.03.2024 வரை அனுபவித்துக் கொள்ளும் பொருட்டு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) சாத்தூர் நகராட்சியினால் ஏற்படுத்தப்பட்ட பொதுஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 1064/2017/சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 730, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 16

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி, அவர்களின் அலுவலக தொலைபேசி வழியாக நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்டத்தினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க 2020–2021–ம் ஆண்டுக்கு TURIP மற்றும் சிறப்பு சாலைத் திட்டத்தின் (SRP) கீழ் ரூ.1000.00 லட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர்பிளாக் சாலைகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு அதற்கான திட்ட வரைபடம் (Site Plan, Culvert, Cross Section) மற்றும் புகைப்படத்துடன் கூடிய மதிப்பீட்டினை ரூ.200.00 இலட்சம் வீதமாக 5 சிப்பங்களாக நிர்வாக அனுமதிக்கு தேவையான இரு திட்ட மதிப்பீடுகளும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான 5 சிப்பங்களுக்கு இரண்டு பிரதிகள் வீதம் தயார் செய்யவும் அதற்கான செலவினை தொகை ரூ.1,25,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 453/2020/எம்)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 731, நாள்: 19.01.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 17</u>

சாத்தூர் நகராட்சி பகுதியில் புதிய பாதாளச் சாக்கடை திட்ட பணிக்காக சாலைகள் தோண்டப்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ள சாலைகள் புதுப்பிக்கும் பொருட்டு அதற்கான நிர்வாக அனுமதி பெறுவதற்கான திட்ட அறிக்கை (2 எண்ணம்) தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான திட்ட மதிப்பீடு (2 எண்ணம்) தயார் செய்வதற்கான விலைப்புள்ளி 04.11.2020–ம் தேதி கோரப்பட்டதில் கீழ்க்கண்டபடி இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | M/s. ராஜா கன்ஸ்டரக்ஸன், திருப்பரங்குன்றம் | – | ரூ. 1,25,000.00 |
| 2. | M/s. TPK and Co மதுரை | – | ரூ. 1,20,000.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகள் குறைந்த விலைப்புள்ளி குடுத்துள்ள M/s.TPK and Co மதுரை விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 453/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 732, நாள்: 11.12.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**